முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட புதுச்சேரி மாநில மக்களுக்கு ரூ.35 லட்சம் மதிப்புள்ள 18.50 டன் அரிசி, 5000 புடவைகள், 5000 வேட்டிகள், 5000 பாய்கள் உள்ளிட்ட நிவாரண பொருட்களை புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் ஆர்.சிவா பெற்றுக்கொண்டார். அப்போது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட புதுச்சேரி மாநில மக்களுக்கு

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் - ரூ.35 லட்சம் மதிப்பில் நிவாரணப் பொருள்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் - அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் வழங்கினார்!

சென்னை, டிச.8-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட புதுச்சேரி மாநில மக்களுக்கு ரூ.35 லட்சம் மதிப்புள்ள 18.50 டன் அரிசி, 5000 புடவைகள், 5000 வேட்டிகள், 5000 பாய்கள் உள்ளிட்ட நிவாரண பொருட்களை புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் ஆர்.சிவா பெற்றுக் கொண்டார்.

அதன் விவரம் வருமாறு: பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாடலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு சார்பில் நிவாரண பணிகளும், பொதுமக்களின் அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடை இன்றி கிடைக்க நடவடிக்கை எடுத்து வருகின்ற நிலையில்;

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய உதவிகள் அனைத்து மாவட்ட கழக சார்பில் வழங்கிட வேண்டும் என தமிழ் நாடு முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, ஏற்கனவே சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, அரியலூர் திருவள்ளூர் மேற்கு, தஞ்சை மத்திய, தூத்துக்குடி வடக்கு ஆகிய மாவட்டங்களின் சார்பில் வழங்கிய நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, புதுச்சேரி மாநிலமும் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட நிலையில், புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளரும் - புதுச்சேரி சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான ஆர்.சிவா, எம்.எல்.ஏ.வை முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (07.12.2024) மாலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்திற்கு அழைத்து, புயல் பாதிப்பு குறித்து நேரில் கேட்டறிந்தார்.

புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் ஆர்.சிவா பாதிப்புகள் குறித்து விளக்கியதோடு, கழகத்தின் சார்பில் புதுச்சேரி மக்களுக்கு உதவிட வேண்டுகோள் வைத்தார்.

அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் உத்தரவிற்கிணங்க, திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும் சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான ஆவடி.சா.மு.நாசர் ஏற்பாட்டில் , சுமார் 35 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 18.50 டன் அரிசி, 5,000 புடவைகள், 5,000 வேட்டிகள், 5,000 பாய்கள் உள்ளிட்ட நிவாரண பொருட்களை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், புதுவை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ஆர்.சிவா பெற்றுக்கொண்டார்.

அப்போது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று (07.12.2024) திருச்சிராப்பள்ளி உறையூர் நகர்நல மையத்தில் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச மருத்துவ பல்துறை பரிசோதனை முகாமைத் தொடங்கி வைத்து முகாமைப் பார்வையிட்டு பயனாளிக்கு தாய்சேய் நல பெட்டகம் வழங்கி தூய்மைப் பணியாளர்கள் சிறப்பான முறையில் பணிகளை மேற்கொள்ள பாதுகாப்பு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் சரவணன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் - திருப்பெரும்புதூர் அரசு மருத்துவமனையை மேம்படுத்த நிதி ஒதுக்கல்!

மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அரசாணை வெளியீடு!

சென்னை, டிச.8-

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் அரசு மருத்துவமனையை மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

திருப்பெரும்புதூர் அரசு மருத்துவமனை 1952 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 16 பேரூராட்சிகள் மற்றும் 132 கிராமங்களுக்கு ஓர் முக்கிய மருத்துவ மையமாக திகழ்கிறது. 53 படுக்கைகளுடன் செயல்பட்டு வரும் இம்மருத்துவமனை, ஆண்கள் மற்றும் பெண்கள் சிகிச்சை பிரிவுகள், குழந்தைகள் நல பிரிவு, கண் சிகிச்சை பிரிவு, முதலமைச்சர் காப்பீட்டு திட்ட பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் தொற்று நோய்களுக்கான சிகிச்சை பிரிவுகளை கொண்டு பல்வேறு மருத்துவச் சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.

சென்னை வாலாஜா பேட்டை தேசிய நெடுஞ்சாலையில் (NH48) அமைந்துள்ள இந்த மருத்துவமனை சாலை விபத்தினால் (RTA) பாதிக்கப்பட்டவர்களுக்கு உயிர்நாடியாக விளங்குவதுடன் உடனடி அவசர சிகிச்சை வழங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், குறிப்பிடத்தக்க வகையில் இம்மருத்துவமனையில் சராசரியாக 838 வெளி நோயாளிகள் மற்றும் 51 உள்நோயாளிகள் நாள் தோறும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இன்றியமையாத மருத்துவ சேவைகள் புரியும் இந்த மருத்துவமனையை வலுப்படுத்த வேண்டிய தேவையின் அவசியத்தை அறிந்து, உலக வங்கியின் நிதியுதவியுடன் மருத்துவமனையை மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்து, இதனை நடைமுறைப்படுத்தும் விதமாக இன்று தமிழ்நாடு அரசு, 3.22 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஆணை பிறப்பித்துள்ளது:

டயாலிசிஸ் இயந்திரத்தை நிறுவுதல்

சிடி ஸ்கேன் கருவியை வழங்குதல் மற்றும்

சிடி ஸ்கேன் கருவியை நிறுவுவதற்கு தேவையான கட்டடம் மற்றும் மின்னிணைப்பு பணிகள்.

உயர்தர மருத்துவ சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்காக, இம்மருத்துவமனையின் திறனை விரிவுபடுத்துவதும், அத்தியாவசிய தேவைகளுக்கு நோயாளிகள் பிற அரசு மருத்துவமனைகளை சார்ந்திருப்பதை குறைப்பதும் இம்மேம்பாட்டின் நோக்கமாகும்.

இம்முயற்சியானது, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள மக்களுக்கு மேம்பட்ட மற்றும் எளிதில் கிடைக்கக் கூடிய மருத்துவ சேவையை உறுதி செய்வதற்கான அரசின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மேயர் பிரியா தலைமையில்

மனிதநேய உதயநாள் - பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம்!

அமைச்சர் கே.என்.நேரு - அப்பல்லோ ப்ரீத்தா ரெட்டி துவக்கி வைக்கின்றனர்.

சென்னை, டிச. 8 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்12, பெண்ணின்றி ஏது உலகம்! முன்னின்று காக்கும் உதயம்!எனும் தலைப்பில் பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நாளை (9.12.2024 திங்கள்கிழமை) காலை 8 மணியளவில், சென்னை, மங்களபுரம், சந்திரயோகி சமாதி சாலை, குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் மருத்துவ முகாமில்,சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன்தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ்குமார் முன்னிலை வகிக்கின்றனர். பெரம்பூர் ஆர்.ராஜன், எஸ். புஷ்பராஜ் வரவேற்கின்றனர்.

இம்மருத்துவமுகாமை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் மேலாண்மை இயக்குநர், அப்பல்லோ மருத்துவமனை மருத்துவர். ப்ரீத்தா ரெட்டி ஆகியோர் பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமை துவக்கி வைக்கின்றனர்.

மேலும், மருத்துவ முகாமில், டாக்டர். கலாநிதிவீராசாமி எம்.பி, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, அ. வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ். இரவிச்சந்திரன், என். கிருஷ்ணமூர்த்தி, சங்கரிநாராயணன், தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, பரிதிஇளம்சுருதி, எம்.விஜயகுமார், என். பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம். தேவன், புலவர் சாமிநாகப்பன், ICF வ.முரளிதரன், ஏ. நாகராசன் எம்.சி, கூ.பி. ஜெயின் எம்.சி, வே.வாசு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், ஸ்ரீராமுலு எம்.சி. பி.உதயசங்கர், பி.ஜே.துளசிங்கம், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், ரமேஷ்(எ) நீலகண்டன், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, எம். இப்ராஹிம்கனி, ஆ.நிர்மலாதேவி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி, டி. லோகேஷ், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், எஸ். தனசேகர், ஜி.ஜே.பிரபு, க.வினோத்குமார், R.D.சங்கர்நானா. மாவட்ட அமைப்பாளர்கள்: வானவில் விஜய், ந.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், புரசை ஜி.தாமோதரன், எல்.பி.எப். மோகன், பி.விஜயகுமார், எம்.விநாயகம், சுதாதீன தயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், துரைகண்ணன், டாக்டர்.ஜி.சாந்தகுமார், ஜி. வி.நாகவள்ளி, க.பா. பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, ம.அசோக்குமார், கா.ராஜ் முகமது, து.ஆயிரம், இரா. வீரமணி. மாமன்ற உறுப்பினர்கள்: புனிதவதி எத்திராசன், வழக்கறிஞர் மு.சரவணன், ரமணி லோகேஷ், தமிழ்செல்வி, சசிகுமார். திரு.வி.க.நகர் வடக்க தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: மா.ருத்ரமூர்த்தி, பரிமளாசுரேஷ்பாபு, எம்.ஏ.டீக்கா, எம். இசட்.அபோய், எஸ்.சசிகுமார், எம்.தமீம், பொல்லு D.சுரேஷ்குமார், வி.கே. வெங்கடேசன், எஸ்.வெங்கடேசன் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார் நன்றி கூறுகிறார்.

சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் வேளச்சேரியில்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

மாநில செயலாளர் டாக்டர் சுபேர்கான் தலைமையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நல உதவிகள் வழங்கினார்!

சென்னை, டிச. 8-

வேளச்சேரியில் டாக்டர் அ.சுபேர் கான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 500க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா நேற்று முன்தினம் சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி இடைவிடா சகாய மாதா ஆலயத்தில் அணியின் மாநிலச் செயலாளரும், தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினருமான டாக்டர் அ. சுபேர்கான் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

மாநில துணைச் செயலாளர்கள் அடையாறு சபீல் கான், என்.பி.எம்.சேக் அப்துல்லா, கா. ரபி அகமது, ஷாகுல் அமீது ஆகியோரது முன்னிலை வகிக்க, சென்னை தெற்கு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை மேயர். மு.மகேஷ்குமார் ஆகியோர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.

விழாவில் தலைமை வகித்து அணிச் செயலாளர் டாக்டர். சுபேர்கான் பேசியதாவது:-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் அரசில் எண்ணிலடங்கா மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக சிறுபான்மையின மக்களின் நலன் காத்திட ஆட்சிப்பொறுப்பேற்ற நொடியில் இருந்து தனிக்கவனம் செலுத்தி வருகிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

திராவிட மாடல் அரசுக்கு தோளோடு தோள் நின்று இன்றைய இளைஞர்களின் நம்பிக்கையாய் விளங்கிக் கொண்டிருக்கும் துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாளை யொட்டி எளியோர் எழுச்சி நாளாக இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுடைய துறையில் தொடங்கி வைக்கப்பட்ட மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டம் மக்கள் நல ஆட்சியின் மகுடமாக திகழ்கிறது. கோடிக்கணக்கான மக்கள் பயன் பெற்றிருக்கிற இத்திட்டம், இந்தியத் துணைக் கண்டத்தில் எவரும் செயல்படுத்தாத திட்டம், மேலும் ஐ.நா மன்றத்தால் விருது பெற்ற மகத்தான திட்டம் என்றார்.

இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் வே.ஆனந்தன், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் வேளச்சேரி மணிமாறன், மாவட்ட கழகப் பொருளாளர் பாஸ்கரன் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் பால சதீஷ், தாமோதரன், மதிவாணன், கோபி, எஸ்.முருகவேல், பாரதிதாசன், தா. பார்த்திபன், சக்திவேல், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட தலைவர் கரிமுல்லா, துணை அமைப்பாளர்கள் பி.அலெக்ஸ், அம்புரோஸ், வசுமதி மற்றும் பல மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

நிறைவாக, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சென்னை தெற்கு மாவட்டக் கழக துணை அமைப்பாளர் ஜெ.ஜெயப்பிரகாஷ் நன்றியுரையாற்றினார்.

தட்சன் ஹரிஹரன் தலைமையில் துணை முதல்வர் பிறந்தநாள்!

130 அ வட்டத்தில் அறுசுவை உணவு - மாணவர்களுக்கு நல உதவிகள்!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை, டிச. 8-

சென்னை தென்மேற்கு தியாகராயர் நகர் மேற்கு பகுதி 130 "அ" வட்டத்தில் இன்று 08.12.2024 மதியம் 12.00 மணியளவில் வட்ட செயலாளர் "தட்சன்" ஹரிஹரன் தலைமையில் தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அழகர் பெருமாள் கோயில் தெரு, பாகம்31 மற்றும் 32 பாகத்தில் உள்ள பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழச்சியும் அதனை தொடர்ந்து திருநகர் 2வது தெரு பாகம்20ல் உள்ள பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் குழந்தைகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்த நிகழச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, எம். எல்.ஏ. தியாகராயர்நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநதி, எம். எல்.ஏ, தியாகராயர்நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை, எம்.சி, மற்றும் 130வது மாமன்ற உறுப்பினர், எஸ்.பாஸ்கர், எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்ச்சிக்கு கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மு.ம.செந்தில்குமார் தலைமையில் துணை முதல்வர் பிறந்தநாள்:

131வது வட்டத்தில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு!

ஜெ.கருணாநிதி - கே.ஏழுமலை வழங்குகின்றனர்!

சென்னை, டிச.08

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 131வது வட்டக் கழகச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 131வது வட்ட கழகத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (08.12.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் வட்ட கழக அலுவலகம் கலைஞர் பொதுநல மன்றம் மற்றும் காசிகுளம் பகுதியில் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி பொதுமக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் தியாகராயர்நகர் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாநிதி, மேற்கு பகுதி கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் கே.ஏழுமலை, 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன் எம்.சி., பகுதி அவைத் தலைவர் மு.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கி, பொதுமக்களுக்கு உணவு வழங்குகிறார்கள்.

ஆகையால் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு சென்னை மாநகராட்சி 24 வது வார்டு தி.மு.க. சார்பாக புழல் பகுதியில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சிக்கு சென்னை மாநகராட்சி 24 வது வட்டக் கழக செயலாளர் கே.பி.சுந்தரேசன் தலைமை தாங்கினார். மேலும் இந்நிகழ்வில் மிசா.பா.மதிவாணன், வழக்கறிஞர் அன்பரசு, வட்டக் கழக நிர்வாகிகள் சி.ஜே.ரவி, எம்.அந்தோணி, பி.கென்னடி, எழில்ராவணன், ஏ.ஜெயகர், மலர்கொடி, செல்வராஜ், பி.எஸ்.என்.எல்.நாகராஜ், கே.பி.பி.அறிவழகன், எம்.கவுதமன், 31 வது வட்ட செயலாளர் பி. மகேஷ், 32 வது வட்ட செயலாளர் ஸ்ரீராம் மற்றும் கழக தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் பிறந்த நாள் விழா! பி.மாரி தலைமையில்

133 அ வட்டத்தில் 1000 பேருக்கு உணவு!

மயிலை த.வேலு - தமிழச்சி தங்கபாண்டியன் - ஜெ.கருணாநிதி பங்கேற்பு

சென்னை, டிச.8

தியாகராய நகர் மேற்கு பகுதி 133 (அ) வட்டத்தின் சார்பில் துணை முதலமைச்சர் மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 1000 பேருக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று 081224 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12:00 மணி அளவில் தியாகராய நகர் பேருந்து நிலையம் அருகில் (தந்தை பெரியார் சிலை) அருகில் மற்றும்

2: பகவந்தம் தெரு : 133 (அ) வட்ட செயலாளர் பி.மாரி தலைமையிலும் தியாக ராய நகர் மேற்கு பகுதி செய லாளர் கே.ஏழுமலை எம்.சி முன்னிலையில் நடைபெறுகிறது.

ஆகிய இரு இடங்களில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு , எம்.எல்.ஏ தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கோ.சு . மணி ஆகியோர் கலந்து கொண்டு உணவு வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில்133(அ) வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அனைவரும கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு பி.மாரி (வட்ட செயலாளர்) தெரிவித்துள்ளார்.

கொடி நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இராணுவத்தில் பணிபுரிந்து உயர்நீத்த தஞ்சை கரந்தை பகுதியைச் சேர்ந்த சரவணன் அவர்களின் மனைவி மகாலட்சுமி அவர்களை தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி சந்தித்து பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.